بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**ஜெர்மனியிலுள்ள Karlsruhe-ல் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 13, June 2014 (Tamil)**

## ஆண்டு மாநாட்டின்போது நாம் ஆய்வு செய்ய வேண்டியவை

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூராஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்று அல்லாஹ்வின் அருளினால் ஜெர்மனியில் ஆண்டு மாநாடு இந்த குத்பாவுடன் துவங்குகிறது. அல்லாஹ்வின் அருளால் மாநாட்டில் வருகை தருபவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் அதிகமாகின்றது. இந்த ஆண்டும் அதிகமாகும் - இன்ஷா அல்லாஹ். அதிகமாகவும் வேண்டும். ஏனெனில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும், அஹ்மதிகள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என மீண்டும் மீண்டும் ஜமாஅத்திற்கு கவனமூட்டி இருக்கிறார்கள். எனவே **ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகமாவதைப் போன்று மாநாட்டின் வருகையும் அதிகமாக வேண்டும்.** மேலும் அதற்காக துன்பங்களை தாங்கிக் கொண்டும் மக்கள் கலந்து கொள்ள வேண்டும். நீங்கள் நற்பேறு பெற்றவர்களாவீர்கள். அல்லாஹ் உங்களுக்கு மாநாட்டிற்கான வாய்ப்பை வழங்கி இருக்கிறான். பாகிஸ்தானில் மாநாடு நடத்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அந்த கட்டுப்பாடுகள் நீங்கிவிட்டால் நாமும் மாநாடு நடத்தலாமே; ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த மாநாட்டிற்கான குறிக்கோளாகக் கூறியவற்றைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாமே; மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்களைப் பெறுபவர்களாக ஆகலாமே என நினைத்து பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகள் நிம்மதியிழந்துள்ளனர். இங்கு (ஜெர்மனியில்) பாகிஸ்தானிலுள்ள சில விருந்தினர்களும் என்னை சந்தித்தனர். நாங்கள் இந்த அருட்கொடையிலிருந்து இழப்பிற்குரியவர்களக இருக்கிறோமே! என சில ஆண்களும் பெண்களும் தேம்பி அழுதவாறு கூறினர். எங்களுக்கும் இந்த அருட்கொடை கிடைக்க துஆ செய்யுஙள் என அவர்கள் கூறினர்.

எப்படி இருப்பினும் நான் எப்பொழுதும் கூறி வருவதைப் போன்று, பாகிஸ்தானின் அஹ்மதிகள் இந்த கஷ்டங்களிலிருந்து வெளியேற வேண்டுமென்றால், அவர்கள் முன்னரை விட அதிகமாக அல்லாஹ்வின் முன்னிலையில் குனிய வேண்டும். அல்லாஹ் சீக்கிரம் அருளுக்கான வழிவகைகளை ஏற்படுத்துவானாக. அநீதியிழைப்பவர்களின் அநீதிலிருந்தும், பகைவர்களின் எதிர்ப்புகளிலிருந்தும் நமக்கு ஈடேற்றத்தை வழங்குவானாக. இவையெல்லாம் துஆக்களினால் ஏற்பட வேண்டியதிருக்கிறது. இவற்றைப் பெறுவதற்கு துஆக்களைத் தவிர வேறு எந்த ஆயுதமும் நம்மிடம் இல்லை! மேலும் **மாநாட்டின் நிகழ்ச்சிகளிலிருந்து முழுமையாக பயன் பெறுங்கள். நீங்கள் இங்கு கண்ட, கேட்ட நல்ல விஷயங்களை உங்களுடைய வாழ்வின் பகுதியாக ஆக்கிக் கொள்ளுங்கள்.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், பொறுமையுடன் மார்க்கத்தைத் தேடுவது, மார்க்கத்தை மட்டும் விரும்புவது ஆகியவற்றையே மாநாட்டின் குறிக்கோளாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது, **இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வருபவர்கள், கொஞ்சம் கஷ்டங்களை, துன்பங்களை தாங்கிக் கொள்ள வேண்டியது வந்தாலும் தாங்கிக் கொள்ள வேண்டும்; ஆனால் எங்களுடன் இப்படி நடந்து கொள்ளப்பட்டது; அப்படி நடந்து கொள்ளப்பட்டது என பொறுமையிழந்த சொற்களை வாயிலிருந்து வெளியேற விட மாட்டோம் என்ற எண்ணத்துடன் வர வேண்டும்.**

மேலும் நான் முன்னரும் கூறியதைப் போன்று, இந்த நாட்களில் உங்களைப் பற்றியும், நம்மிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விரும்புகின்ற அந்த உயர் தகுதியைப்

பெறுவதற்கு நாம் முயற்சி செய்கிறோமா என ஆய்வு செய்து பாருங்கள். மாநாட்டின் நாட்களில் அல்லாஹ்விற்குரிய உரிமைகள், இறையடியார்களுக்குரிய உரிமைகள் ஆகிய இரண்டையும் நிறைவேற்றும் செயலை வெளிப்படுத்த முடியும். பிறகு அந்த செயலை வெளிப்படுத்துவதை வாழ்க்கையின் நிரந்தமான அங்கமாக மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். **இந்த மாதத்தின் கடைசியில் ரமலான் மாதமும் துவங்குகிறது. அது செயல் அளவில் தர்பிய்யத் பெறுவதற்கான மாதமாகும். (மாநாட்டின்) இந்த நாட்களுடைய அருள்களை ரமலானின் மகத்தான அருள்களுடன் இணைப்பதற்கு முயற்சி செய்தால் நம்மிடம் ஆன்மீக புரட்சி ஏற்பட முடியும்.** இந்த எண்ணத்துடன் மாநாட்டிற்கு வரவில்லை என்றால் அல்லது இந்த நாட்கள் எந்தவொரு மாற்றத்தையும் உருவாக்கக் கூடியதாக மாறவில்லை என்றால் அல்லது அதற்காக முயற்சி செய்யவில்லை என்றால் இந்த மாநாட்டில் வருவதும் வராதிருப்பதும் ஒன்றுதான். இன்னும் சொல்லப்போனால் அது சில நேரத்தில் நஷ்டத்திற்குக் காரணமாகவும் அமையலாம்; ஓர் ஒட்டுமொத்தமான தடுமாற்றத்திற்குக் காரணமாகவும் அமையலாம்.ஆனால் பொறுமை, சகிப்புத்தன்மை, மாநாட்டில் கலந்து கொள்வதற்கான உண்மையான நோக்கத்தை பெறுவது ஆகியவை உண்மையான குறிக்கோளாக இருக்குமென்றால், நமது ஈமானில் முன்னேற்றம் ஏற்படுவது மட்டுமின்றி, மனிதன் பலருடைய ஈமானின் முன்னேற்றத்திற்கும் நேர்வழிக்கும் காரணமாக அமையலாம்.

அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதிய்யத்தின் உலகில் தற்போது எல்லா இடத்திலும் மாநாடுகள் நடக்கின்றன. ஜமாஅத்துகள் அதிகமாகியுள்ள பல இடங்களில் மாநாடுகள் நடக்கின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் பல்வேறு சமுதாயங்களுடனும், வழித்தோன்றல்களுடனும் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் காரணமாக உலகில் பரவும் நேர்வழி நம்மையும் அல்லாஹ்வின் பக்கம் குனிபவர்களாக ஆக்குகின்றது. ஒருபுறம் ஒரு தீயவர் தனது ஈமானை வீணாக்கி விடுகின்றார் என்றால் மறுபுறம் ஈமான் கொள்ளும் நூற்றுக்கணக்கான நற்பேறு பெற்றவர்களும் இருக்கின்றனர். அதற்குரிய உதாரணம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் இருந்தது; இன்றும் இருக்கின்றது. இந்த நேரத்தில் நான் ஓர் உதாரணத்தைக் கூறுகிறேன். ஆயிரக்கனக்கான மைல் தூரத்தில் உட்கார்ந்திருபவர்கள் ஈமானில் முன்னேற்றம் அடைகின்றனர். அவர்களில் பெரும்பாலார் காலத்தின் கலீஃபாவையும் பார்த்திருக்க மாட்டர்கள். பார்த்தவர்களுக்கும் (கலீஃபாவைப்) பார்த்து 25,30 ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனால் அப்படிப்பட்டவர்கள் எந்த அளவுக்கு நேர்வழிக்குக் காரணமாக அமைகிறார்கள்! மேலும் ஈமானில் எந்த அளவுக்கு முன்னேறிச் செல்கிறார்கள்!! இதைப் பார்த்து (நமக்கு) வியப்பு ஏற்படுகிறது.

**Sierra leone** (சிரால்யோன்) லுள்ள ஒரு சம்பவம். ஒரு முஅல்லிம் சாஹிப் எழுதுகிறார்: கய்ஃபே சியோடம் என்ற இடத்திலுள்ள சீஃப் இமாம் மற்றும் டிபுடி சீஃப் இமாம் ஷேக் ஆதம் ஆகியோர் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மிகவும் எதிரியாக இருந்தனர். அவர்களிடம் நமது உள்ளூர் முஅல்லிமாகிய ஜனாப் ஷேக் இப்ராஹீம் தோரே சாஹிப் அவர்கள் ஜமாஅத் விஷயங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தார். சிரால்யோனிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு நெருங்கியபோது முஅல்லிம் சாஹிம் அவர்கள், சீஃப் இமாம் மற்றும் டிபுடி சீஃப் இமாம் ஷேக் ஆதம் ஆகியோரை மாநாட்டில் விருந்தினராகக் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்தார். சீஃப் இமாம் சாஹிப் மறுத்து விட்டார். ஆனால் டிபுடி சீஃப் இமாம் ஆகிய ஷேக் ஆதம் அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். அவர் ஆண்டு மாநாட்டிற்கு வருகை தந்தார். **ஆண்டு மாநாட்டின் முதல் நாளில் மக்கள் தஹஜ்ஜுது தொழுகைக்காக ஒன்று கூடி யிருந்தனர். அது மிகப் பெரும் கூட்டமாக இருந்தது. பிறகு ஹஜ்ஜுது தொழுகையில் திருக்குர்ஆன் ஓதக் கேட்டார். மேலும் மக்கள் இறைவன் முன்னிலையில் அழுதவாறு துஆ செய்யக் கண்டார். அப்போது அவர் கூறுகிறார்: என் உள்ளம் உருகி விட்டது. இந்த அடையாளங்கள், இறைவணக்கங்களில் மக்கள் இவ்விதமாக மூழ்கி இருப்பது இவர்கள் உண்மையாளர்கள் என்பதையும், இது உண்மையாளர்களின் ஜமாஅத் ஆகும் என்பதையும் காட்டுகிறது. உலக மக்கள், பொய்யான மக்களின் கூட்டத்திலுள்ள மக்கள் இப்படிச் செய்வதில்லை என அவர் கூறினார்.**

பிறகு கொள்கை பரப்புநர் கூறுகிறார்: மாநாட்டு நிகழ்ச்சியின் முதல் அமர்வு முடிந்தபோது நான் அவரிடம், இந்த மாநாடு உங்களுக்கு எப்படி இருந்தது எனக் கேட்டேன். அதற்கு அவர், நான் ஜமாஅத் சகோதரர்களின் ஜமாஅத் பழக்க வழக்கங்களினால் மிகவும் தாக்கத்திற்குள்ளாகி இருக்கிறேன்; நான் அஹ்மதியாகி விட்டேன்; மேலும் எனது எல்லா சந்தேகங்களும் நீங்கி விட்டன எனக் கூறினார்.

மேலும் மாநாட்டிலிருந்து திரும்பிச் சென்று தமது ஊரிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் செயல்படுகின்றதுதான், பரப்புகின்றதுதான் உண்மையான இஸ்லாம் ஆகும் என தப்லீக் செய்ய ஆரம்பித்து விட்டார். இதனால் அவருடைய இமாம் அவர் மீது கோபப்பட்டார்; அவரை ஊரிலிருந்து வெளியேற்றியும் விட்டார். அப்போது அவர், எனக்கு உண்மை கிடைத்து விட்டது; இப்போது நான் ஜமாஅத்திற்காக எல்லாவற்றையும் விட்டு விடுவேன்; உண்மைக்கு சாதகமாக இருப்பேன் என்றார். அல்லாஹ்வின் அருளினால் அவர் மூலமாக அந்த ஊரில் பலர் அஹ்மதிகளாக மாறினர்.

ஆக, **ஓர் ஆண்டு மாநாடு ஒருவரை அஹ்மதி ஆக்கியது. பிறகு அதன் காரணமாக நூற்றுக்கணக்கான மக்களுக்கு அஹ்மதியாகின்ற, காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்கின்ற நல்வாய்ப்பு கிடைத்தது**. ஷேக் ஆதம் சாஹிப் அவர்கள் ஜல்ஸா சாலானா (ஆண்டு மாநாடு) வின் காரணமாக அஹ்மதியானார்கள்; எனவே **இப்போது அவர் தனது பெயரை ஷேக் ஆதம் ஜல்ஸா சாலானா என வைத்து விட்டார்.**

எனவே மாநாடுகள் பல ஆதம்களை உருவாக்குகின்றன. இறைவன் அவர்களின் நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி புதிய பூமியையும் புதிய வானத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றான். எனவே **பெரும்பாலும் பிறப்பு அஹ்மதிகளாக இருக்கின்ற நம்மில் ஒவ்வொருவரும் நமது நிலைமைகளை சரி செய்வது பற்றி கவலைப்பட வேண்டும்.**

ஆக, இது மாநாடுகளின் அருள்களாகும். அவை நமக்குத் தென்படுகின்றன. அஹ்மதிய்ய உலகத்தில் தற்போது நன்மைகளில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ளும் ஓர் ஓட்டப் பந்தயம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த ஓட்டப் பந்தயத்தில் பின் வாங்காமல் இருக்கும் அளவுக்கு நீங்களும் முயற்சி செய்யுங்கள். ஒருகாலத்தில் நகரங்களுக்கு மத்தியில் போட்டிகள் நடந்து கொண்டிருந்தன. தற்போதோ நாடுகளுக்கிடையில் போட்டிகள் நடக்கின்றன. அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டவரின் வேதனையைப் புரிந்தவாறு தமது நிலைமைகளில் மாற்றங்களை உருவாக்க முயற்சி செய்பவர்கள்தான் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாவர்.

நான் இங்கு பணியாளர்களுக்கு – குறிப்பாக விருந்தோம்பல் பணியில் அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களுக்கு சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆரம்பத்திலேயே மிகவும் தாராள மனப்பான்மை கொண்டவர்களாக இருந்தார்கள். **விருந்தினர்கள் வருவதனால் களைப்படைந்து விடாதீர்; கவலை கொள்ளாதீர் என அன்னாருக்கு அல்லாஹ் கூறியிருந்தான்; இது அன்னாருக்கு மட்டுமல்ல; மாறாக, அல்லாஹ்வின் இந்தக் கட்டளை, அல்லாஹ்வின் விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்யும் பணியாளர்களாகிய உங்களுக்கும்தான்.** இந்த விருந்தினர்கள் அன்னார் (அலை) காலத்திலும் இருந்தனர். அன்னாருக்குப் பிறகு வந்தவர்களிலும் இருந்தனர். இது அவர்களுக்கு இறையருளைப் பெற்றுத் தருவதற்கான வாய்ப்புகளாக இருக்கின்றன.

எனவே இந்த நாட்களில் விருந்தினர்களை குறிப்பாக கவனத்தில் கொள்ளுங்கள். மாநாட்டில் மட்டுமின்றி, பொதுவான நிலைமைகளிலும் கவனத்தில் கொள்ள வேண்டும். திருக்குர்ஆன் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் விருந்தோம்பல் பற்றிய செய்தியை நமக்குத் தெரிவித்திருக்கிறது. மேலும் விருந்தினர்களிடம் விருந்தோம்பல் செய்யட்டுமா? வேண்டாமா? எனக் கேட்கக் கூடாது. எந்த விதமான செலவுகளைப் பற்றியும் கவலைப் படக் கூடாது. விருந்தோம்பல் செய்ய வேண்டும். அவர்களுடைய வசதிகளை கவனத்திற் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குறிப்பாக விருந்தோம்பல் பற்றி அறிவுரை கூறியிருக்கிறார்கள். மதீனாவிலுள்ள அவர்களின் சஹாபிகள் வெளியிலிருந்து வந்த விருந்தினர்களின் வசதிகளை கவனத்திற் கொண்டார்கள் என்றும், தம்மை விட விருந்தினர்களுக்கு அதிக வசதிகளை செய்து கொடுத்தார்கள் என்றும், தமது வாய்ப்புகளை விட அதிகமாக அவர்களை கவனித்தார்கள்; அவர்களுக்கு விருந்தோம்பல் செய்தார்கள் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேள்விப்படும்போது மகிழ்ச்சியால் அவர்களின் முகம் ஒளிமிக்கதாக மாறியது. அவ்வாறே விருந்தோம்பல் விஷயத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னுதாரணங்களும் நமக்கு முன்னால் இருக்கின்றன. எனவே இங்குள்ள அமைப்பாளர்களும் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தைப் புரியுங்கள் என நான் கவனமூட்டுகின்றேன்.

ஒன்று இங்கு மாநாட்டில் நடக்கின்ற விருந்தோம்பல். இன்னொரு விருந்தோம்பல் பொதுவான நாட்களில் உள்ளதாகும். நான் கூறியது போன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

அவர்கள் ஒவ்வொரு தேவைக்கேற்ப – விருந்தினர்களின் இயல்புக்கேற்ப விருந்தோம்பல் செய்ய முயற்சி செய்து வந்தார்கள். எனவே சம்பந்தப்பட்ட அமைப்பாளர்களுக்கும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. ஒருவருக்கு உணவளித்து விடுவதனால் விருந்தோம்பலின் உரிமை நிறைவேறி விட முடியாது. இன்னும் சொல்லப்போனால் விருந்தினருக்கு தொண்டு செய்யும் உரிமை என்பது நிறைவேறவே முடியாத ஒன்று என்றே சொல்ல வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் தமது குத்பாவின் முடிவில் கூறினார்கள்:

மாநாட்டைப் பொருத்தவரையில் (பாதுகாப்பு அம்சத்தைக் கருத்தில் கொண்டவாறு) உங்களில் ஒவ்வொருவரும் உங்களுடைய சுற்றுப்புறச் சூழலைக் கண்காணிக்க வேண்டிய தேவை இருக்கிறது. கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் டியூட்டியில் உள்ள பணியாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுங்கள். பாதுகாப்பு பிரச்சனைகள் தற்போது எல்லா இடத்திலும் இருக்கின்றன. எனவே எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. கலந்துகொள்பவர்களுக்கு இந்த ஆண்டு மாநாட்டுடன் தொடர்புடைய அருள்களை சேகரித்துக் கொள்பவர்களாக ஆக்குவானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கத்தை நாம் நிறைவேற்றுபவர்களாக ஆவோமாக. அன்னார் தமது ஜமாஅத்துடன் வைத்திருந்த எதிர்பார்ப்புகளை நாம் நமது வாழ்வின் அங்கமாக ஆக்குபவர்கள் ஆவோமாக. அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***